# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 025/மா/2019
ஆணை நாள்: 3–3–2020

1. திரு. A. ராஜேந்திரன்,
2. திரு. R.ஸ்ரீதரன் (எ) ஸ்ரீதர்,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்கள்

1. திரு. முருகேசபாண்டியன்,
உதவி ஆணையர் (பொ),

2. திருமதி. M. ஆனந்தம்,
உதவி வருவாய் அலுவலர்,
மண்டலம் -01,
மதுரை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்கள்

மதுரை – 16, டெக்னிக்கல் ஸ்கூல் மெயின் ரோடு, கதவு எண். 14C என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. ராஜேந்திரன் மற்றும் கதவு எண். 15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. ஸ்ரீதரன் என்கின்ற ஸ்ரீதர் ஆகியோரின் 09.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு 12.02.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண். 25/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர்கள் தங்களது 09.02.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் மதுரை மாநகராட்சி, டெக்னிக்கல் ஸ்கூல் மெயின் ரோடு, கதவு எண். 14C ல் உள்ள சொத்திற்கு வரிவிதிப்பு எண். 45079 இராஜேந்திரன் பெயரிலும், கதவு எண். 15 ல் உள்ள சொத்திற்கு வரிவிதிப்பு எண். 45080 ஸ்ரீதரன் என்கிற ஸ்ரீதர் பெயரிலும் நிலுவையின்றி வரி செலுத்தி வருவதாகவும், திரு. ரவிச்சந்திரன் என்பவர் மேற்படி சொத்தில் பாத்தியம் உள்ளது என்று மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம், மதுரைக் கிளையில் தொடர்ந்த வழக்கு W.P.(MD) No. 2172/2013 நிலுவையில் உள்ளது என்றும், இதனை மறைத்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேலும்

ஒரு நீதிப்பேராணை W.M.P.No. 4312/2017 மற்றும் W.P.No. 5360/2017 ன்படி வழக்கு தொடந்தார் என்றும், இவ்வழக்குகளில் கீழ்க்கண்டவாறு தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்:-

"There shall be an order of Interim Injunction restraining the third respondent or his subordinates or agents from collecting the property tax inrespect of the assessment Nos, 45079 & 45080 for upcoming assessment years from R4, subject to the condition that the Petitioner shall pay property tax which is assessed by the third respondent within a period of six weeks from the date of receipt of this order, failing which the interim stay shall be stand automatically vacated without further reference to this court".

அதன்படி திரு. ரவிச்சந்திரன் எந்த வரியும் செலுத்தவில்லை என்றும், இதற்கிடையில் மேற்படி வரிவிதிப்புகள் முடக்கப்பட்டுள்ளதாக 8.5.2018ல் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், திரு. ரவிச்சந்திரன் வரியை செலுத்தாததால் 17.11.2017 அன்று தங்களால் வரிகள் அனைத்தும் செலுத்தப்பட்டு, மாநகராட்சியால் 16.12.2017 அன்று வரிபாக்கியில்லாச் சான்று வழக்கப்பட்டது என்றும், இந்நிலையில் திரு. ரவிச்சந்திரன் மதுரை மாநகராட்சி அதிகாரிகளை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.317/2018 மற்றும் 991/2017 என இருவழக்குகள் தொடந்தார் என்றும் இவ்விரு வழக்குகளும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்திற்கான 2018-2019 ஆம் ஆண்டிற்கான சொத்துவரி அனைத்தும் 09.04.2018 அன்று செலுத்தி ரசீது பெற்றதாகவும், தான் 11.04.2018 அன்று வெளியூர் சென்றிருந்த போது, தனது மேலாளரிடம் இருந்து உதவி வருவாய் அதிகாரி திருமதி. ஆனந்தம் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் திரு. S. யாகூப்கான் மற்றும் திரு. மாணிக்கம் ஆகிய மூவரும் வலுக்கட்டாயமாக வரிசெலுத்திய அசல் ரசீதை பெற்று கொண்டு சென்று விட்டார்கள் என்றும், மாநகராட்சிக்கு செலுத்தப்பட்ட வரி தொகையினை திரும்ப தங்களிடம் கொடுத்துவிட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் 2017-2018 ஆம் ஆண்டிற்கான சொத்துவரி செலுத்தப்பட்டு மதுரை மாநகராட்சி, 1-வது மண்டலம், உதவி ஆணையர் அவர்களால் வரிபாக்கியில்லா சான்று 16.12.2017-ல் வழங்கப்பட்டது என்றும், மேற்படி சான்றின் உண்மைத் தன்மை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மதுரை மாநகராட்சியின் 1-வது மண்டல உதவி ஆணையருக்கு கடிதம் அனுப்பியும், பதில் அளிக்கவில்லை என்றும், 1-வது மண்டல உதவி ஆணையர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகிய இருவரும் ரூ.20,000/- லஞ்சம் கேட்டு கொடுக்க மறுத்ததால் உண்மை தன்மை சான்று அனுப்பாமல் காலம் கடத்தி வருகிறார்கள் என்றும், மேற்படி சொத்துகளுக்கான நடப்பு சொத்து வரியினை பெற்றுக்கொண்டு உரிய வரி ரசீது வழங்க வேண்டும் என்றும், தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ள சொத்து வரிவிதிப்பினை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென்றும், சொத்துவரி விதிப்பு கணக்கில் நீக்கம் செய்யப்பட்டுள்ள தங்களது பெயர்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் 11.9.2018 நாளிட்ட கடிதத்தில் கேட்டிருந்தபடி உண்மை தன்மை சான்றினை அனுப்பிவைக்க உத்தரவிடவும் முறையிட்டுள்ளார்கள்.

இம்முறைமன்ற நடுவத்தின் 3.7.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர்கள் திரு. A. ராஜேந்திரன் மற்றும் திரு. R. ஸ்ரீதரன் ஆகியோர்கள் 13.8.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மதுரை மாநகராட்சி மண்டலம் 01, வார்டு 15, டெக்கினிக்கல் ஸ்கூல் மெயின் ரோடு, கதவு எண்.15 மற்றும் 14C உள்ள சொத்துக்களுக்கான வரிவிதிப்பு எண்.45079 திரு. A. ராஜேந்திரன் பெயரிலும், வரிவிதிப்பு எண். 45080 திரு. R. ஸ்ரீதரன் பெயரிலும் உள்ளது என்றும், திரு.ரவிச்சந்திரன் மேற்படி சொத்தில் பாத்தியம் உள்ளது என்று மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் W.P. (MD) No. 4312 of 2017 in W.P.(MD) No. 5385 of 2017 ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், மாநகராட்சி தங்களது வரிவிதிப்பு கணக்கை முடக்கி விட்டார்கள் என்றும், வரிவிதிப்பு செலுத்த முடியாமல் செய்து விட்டார்கள் என்றும், தங்களது தியேட்டர் இயங்க E-permit வழங்காமல் இடையூறு செய்து விட்டார்கள் என்றும், மாநகராட்சி 1-வது மண்டல அலுவலர் மீது நடவடிக்கை எடுத்து, வழக்கு முடியும்வரை பழைய நிலையே தொடர ஆணையிடுமாறு தெரிவித்துள்ளார்கள்.

இம்முறைமன்ற நடுவத்தின் 24.9.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் திரு. எம். வி. முருகேச பாண்டியன் மற்றும் திருமதி. எம். ஆனந்தம் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர்கள் 11.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளுக்கான வரிவிதிப்பு எண். 45079 மறறும் 45080 முறையே திரு. A. ராஜேந்திரன் மற்றும் திரு. R. ஸ்ரீதரன் ஆகியோரின் பெயர்களில் உள்ளது என்றும், இது தொடர்பாக திரு. ரவிச்சந்திரன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறதென்றும், இது சம்மந்தமான விபரங்களை அறிக்கையாக அனுப்பி வைப்பதாக தெரிவித்தார்கள். அதன்படி மதுரை மாநகராட்சி 1-வது மண்டல உதவி ஆணையர் தனது 22.11.2019 நாளிட்ட அறிக்கையில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு 15, கதவு எண்.14C,கதவு எண். 15 ஆகியவற்றின் சொத்துவரி, குழாய்வரி, பாதாள சாக்கடை பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றை திரு.A.ராஜேந்திரன் மற்றும் திரு.ஸ்ரீதரன் ஆகியோர்கள் பெயரில் வரி விதிப்பு எண். 45080 மற்றும் 45079 ன்படி பெயர் மாற்றம் செய்து மாநகராட்சி கடிதம் எண். மே.வ.36821/2010 நாள் 18.12.2012 ல் ஆணை பிறப்பித்துள்ளதை எதிர்த்து மேற்படி திரு. A. ராஜேந்திரன் அவர்களின் மூத்த மகனான திரு.R.ரவிச்சந்திரன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD) No.2172/2013ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும் அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், திரு. R. ரவிச்சந்திரன் இதே பொருள் சம்மந்தமாக மேலும் ஒரு வழக்கினை மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD) எண்.5385/2017 ன்படி வழக்கு தாக்கல் செய்தும், மேலும் W.M.P.(MD) No. 4312 of 2017 in W.P. (MD) No. 5385 of 2017 என்ற வழக்கினை மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர், உதவி ஆணையர் மண்டலம் 01, திரு. A. ராஜேந்திரன் மற்றும் திரு. R. ஸ்ரீதரன் ஆகியோர்கள் மீது வழக்கு தொடர்ந்து இடைக்கால தடை பெற்றார் என்றும், அதனைத் தொடர்ந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை வழக்கு எண். Cont.P. (MD) No. 317/2018 in W.M.P. (MD) No. 4312 of 2017 in W.P.(MD) No. 5385 of 2017 ன்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடந்த வழக்கில் 16.3.2018 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பில் மாநகராட்சி சொத்துவரி கேட்பின்படி

சொத்துவரி செலுத்த மனுதாரர் திரு. R. ரவிச்சந்திரனுக்கு உத்தரவிட்டும், அதே சமயம் மேற்படி வழக்கில் மனுதாரர் மற்றும் 3வது, 4வது எதிர்மனுதாரர்களின் தாவாவிற்குட்பட்ட சொத்தின் சொத்து உரிமை பாதிக்காத வண்ணமும், தாவாவிற்குட்பட்ட சொத்தில் உரிமை கோரும் இரு தரப்பினருக்கும் இடையே நீதிமன்றம் தீர்வு ஏதும் வழங்கவில்லை என்று தீர்ப்பளித்துள்ளது என்றும், இவ்வழக்கின் 3, 4வது எதிர்மனுதாரர்களான திரு. A. ராஜேந்திரன் மற்றும் திரு. ஸ்ரீதரன் ஆகியோர்கள் மாநகராட்சி கேட்பின்படி வரி செலுத்துவது பற்றி தீர்ப்பில் ஏதும் குறிப்பிடவில்லை என்றும், இந்நிலையில் திரு. R. ரவிச்சந்திரன் தாக்கல் செய்த மேற்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் மூல வழக்கு எண். WP (MD) 5385/2017 தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், தனது அறிக்கையில் தற்போது வரை தாவாவிற்குட்பட்ட சொத்துக்குரிய ஆவணங்களை சமர்ப்பித்து திரு. R. ரவிச்சந்திரன் தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யாமல் இருந்து வருகிறார் என்றும், தற்போதைய நிலவரப்படி தாவாவிற்குட்பட்ட சொத்துக்கான சொத்துவரி வரிவிதிப்பு எண். 45080 மற்றும் 45079 ஆகியவைகள் திரு. A. ராஜேந்திரன் மற்றும் திரு. R. ஸ்ரீதரன் பெயரில் உள்ளது என்றும், திரு. R. ரவிச்சந்திரன் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண். WP(MD)2172/2013 மற்றும் WP(MD)5385/2017 தற்போதும் நிலுவையில் உள்ளது என்றும் இவ்வழக்குகளில் நீதிமன்றம் வழக்கும் தீர்ப்புரையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர்களின் கோரிக்கை, விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி 1-வது மண்டல உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர்கள் தங்களது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து சம்மந்தமான வழக்குகள் நிலுவையில் உள்ளது என்பது வாக்குமூலங்கள் மற்றும் அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனிலும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொள்ள இயலாது. எனவே, இந்நேர்வில், இந்நிலையிலேயே இம்முறையீட்டு மனு மீதான தொடர் நடவடிக்கையை கைவிட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3- ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு இவ்வலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்;

1) திரு. A.ராஜேந்திரன்,
கதவு எண்.14C, டெக்னிக்கல் ஸ்கூல் மெயின் ரோடு,
A.A. ரோடு, மதுரை – 16.

13/3/2020

2) திரு. R. ஸ்ரீதரன் (எ) ஸ்ரீதர்,
த/பெ. இராஜேந்திரன்,
கதவு எண். 15, டெக்கினிக்கல் ஸ்கூல் மெயின் ரோடு,
A.A. ரோடு, மதுரை – 16.

3) உதவி ஆணையர்,
மண்டலம் -01,
மதுரை மாநகராட்சி.
மதுரை – 10.

4) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்